**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**MCOP.No. 15/2025**

**எதிர்மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி பிரசாந்த் என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரசாந்த் | வயது | : | 33 |
| தகப்பனார் பெயர் | : | வீரசெல்வம் | தாலுகா | : | கும்பகோணம் |
| கிராமம் | : | கும்பகோணம் | தொழில் | : | |

**நாள்: 05.02.2026**

**எ.ம.சா.1**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் எதிர்மனுதாரர் தரப்பு முதல் சாட்சி. ஆவணங்கள் தாக்கல் இல்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 13.10.2024ம் தேதி TN 68 N 0763 என்ற அரசு பேருந்தை நான் தான் ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். திருச்சி - தஞ்சை தேசிய நெடுஞ்சாலை அகலமான நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். விபத்தில் காயமடைந்த மனுதாரர் சாலையின் ஓரமாக நடந்து சென்றார் என்றால் சரிதான்.

2. மனுதாரர் சாலையை குறுக்கே கடக்கவில்லை என்றும் அவர் சாலை இடது ஓரமாக நடந்து சென்றுகொன்டு இருந்தார் என்றும் நான் தான் கவணக்குறைவாக பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது கவணக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டதால் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**